# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.468/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 14 | நாள் | : | 04.08.2026 |
| பெயர் | : | கோகுலகிருஷ்ணன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ கணவர் பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04th day of August 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோயம்புத்தூர் மாநகர காட்டுர் சரக உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கடந்த 13.01.2020 ம் தேதி தென்காசி காவல் நிலையத்தின் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.மாதவன் என்பவர் புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை கு.எண்.19/2020 வழக்கின் புலனாய்வை மேற்கொண்டு ஆய்வாளர் ஆடிவேல் வழக்கின் மேல்விசாரணை மேற்கொண்டு அவர் பிரிவு 16, 18, 20, Unlawful Activities ( Prevention) Act-ன் கீழ் சட்ட மாறுதல் மேற்கொண்டு விசாரணை நடத்தினார். பின்னர் எதிரிகள் 1முதல் 5 பேரை கைது செய்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்

காவல் அடைப்புக்கு ஒப்படைத்துள்ளார். UAPA வழக்கு என்பதால் ஆய்வாளர் 24.01.2020 தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் காவல் துறை தலைவர் மூலம் NIA நிறுமத்திற்கு தகவல் தெரிவிக்கவும் தகுதியான வழக்கு என்றால் அவர்கள் விசாரணை மேற்கொள்ளவும் தகவல் தெரிவித்துள்ளார். 08.02.2020 அன்று வழக்கு கோப்புகளை என்னிடம் ஒப்படைத்தார். நான் கோப்பை பார்வையிட்டு சாட்சிகள் மாதவன், சம்சுதீன், மாரியப்பன், ஜசக்ராஜா, ரமேஷ், கார்த்திக் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் 3ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பார்வையிட்டேன். மற்றொரு எதிரி கன்னியாகுமரியில் இருப்பதாக இரகசிய தகவல் மூலம் தெரியவந்ததால் அன்றைய தினமே பிரிவு 55ன் படி 19/து.கா.தென்காசி/2020 என்ற நடவடிக்கையின் மூலம் காவல் ஆய்வாளர் ஆடிவேல் தலைமையில் சார் ஆய்வாளர் மாரிமுத்து, தலைமைகாவலர் தனசேகரன், வடிவேல்முருகன், சீவலமுத்து ஆகியோர்களை தனிப்படை அமைத்து கன்னியாகுமரி மாவட்டம் சென்று மேற்படி தலைமறைவு எதிரி அனீஸ் என்ற நபரை தேடிக் கண்டுபிடிக்கவும் கைது செய்யவும், அவரிடமிருந்து சொத்துக்கள் ஏதுமிருந்தால் அதனை கைப்பற்றவும் ஆளினர்களை நியமித்து ஆணை பிறப்பித்தேன். நான் பிறப்பித்த நடவடிக்கை உத்தரவு அ.சா.ஆ.8 ஆகும். நான் அமைத்த தனிப்படையின்படி ஆய்வாளர் ஆடிவேல் கன்னியாகுமரி மாவட்டம் சென்று 6ம் எதிரியை 09.02.2020 அன்று 16.30 அளவில் களியாக்கவிளை பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து 17.30 மணிக்கு நேசமணிநகர் காவல் நிலையம்

கொண்டு வந்து ராமன் புதூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அன்றைய தினம் இரவு 10 மணிக்கு களியாக்கவிளையில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை அடையாளம் காட்டி எடுத்துக் கொடுத்ததை கைப்பற்றியுள்ளார். பின்னர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். 10.02.2020 காலை 10.00 மணிக்கு தென்காசி வந்து தனிப்படை மேற்கொண்ட நடவடிக்கைகளை என்னிடம் தெரிவித்தார். அவர் கைப்பற்றிய சொத்துக்கள் வாக்குமூலங்க்ள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஒப்படைத்தார். நான் தனிப்படை அலுவலாக சென்ற ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர்களை கண்ணன் , மணிகண்டன் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட எதிரியை ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றிய சொத்துக்களை படிவம்-91 ஆகியவற்றின் மூலமாகவும், வழிகாவல் மூலமாகவும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 22.03.2020 முதல் கொரோனா பெருந்தொற்று காரணமாக பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதால் வழக்கின் புலனாய்வு மேலும் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் 04.07.2020 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து NIA புலனாய்வு அமைப்பு இவ்வழக்கு NIA முகமை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளதக்க வழக்கல்ல என்றும் எங்களையே புலனாய்வு

மேற்கொள்ளும்படியும் கூறிய தகவலின் அடிப்படையில் காவல் கண்காணிப்பாளர் மூலம் எனக்கு தகவல் வரப்பெற்றது. 21.08.2020 அன்று கைப்பற்றப்பட்ட பொருட்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றுத்தரும்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.9 ஆகும். 26.08.2020 அன்று 1 முதல் 5 எதிரிகளை கைது செய்த இடத்தில் உரிமையாளர் சண்முகசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் நீதித்துறை நடுவர் 27.08.2020 தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கைப்பற்றப்பட்ட பொருட்களை அறிவியல் ஆய்வு மேற்கொள்ள கடிதம் அனுப்பியுள்ளார் அந்த கடிதம் அ.சா.ஆ.10 ஆகும். மேற்படி பொருட்களை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த காவலர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.09.2020 ம் தேதி எதிரிகள் மீது UAPA வழக்கு என்பதால் அவர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அனுமதி கோரி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 18.01.2021ம் தேதி மடிக்கணினியில் உள்ள பதிவுகளை படிமாற்றம் செய்து வழங்கும்பட்சம் அதனடிப்படையில் ஆய்வு செய்து புலனாய்வை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பதால் அதன் படிநகல் ஒன்றை வழங்கும்படி அதை தடய அறிவியல் ஆய்வுக்குட்படுத்த நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நீதித்துறை நடுவர் அந்த கடிதத்தை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு

அனுப்பி வைத்தார். 13.04.2021 அன்று எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கான அரசு அனுமதி உத்தரவு கிடைக்கப்பெற்றது. Home (POL.VII) Department, G.O.(4D) No. 02 dated 08.01.2021 ஆகும். 10.06.2021 அன்று முக்கிய அவசர வழக்கு என்பதால் விரைந்து அறிக்கை வழங்கும்படி மீண்டும் ஒரு கடிதம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் பணியிட மாறுதல் பெற்று சென்றுவிட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

UAPA ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் 180 நாட்களுக்குள் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். 13.01.2020 அன்று நான்தான் காவல் துணை கண்காணிப்பாளராக இருந்தேன். எனது காவல் வரம்பிற்குட்பட்ட பகுதியில் உள்ள காவல்நிலையங்களில் பதிவு செய்யப்படும் குற்ற வழக்குகளில் முக்கிய வழக்குகள் அனைத்தும் உடனடியாக என் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என்றால் சரிதான். நான் குற்ற இறுதியறிக்கையை படித்துப் பார்க்கவில்லை. எனக்கு பின்னால் வந்த புலனாய்வு அலுவலர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். நான் கையெழுத்திட்ட வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. நான் கூறுவதுபோல் என்னை துணை கண்காணிப்பாளர் நாகசங்கர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் என்னை விசாரிக்காமலேயே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. UAPA வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பு மாவட்ட கண்காணிப்பாளரின் அனுமதி பெற்றுத்தான்

வழக்கு பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. 13.01.2020ம் தேதியன்றே இந்த வழக்கு விபரம் எனக்கு தெரியவந்தது. UAPA சட்டத்தின்கீழ் காவல் துணை கண்காணிப்பாளர் மட்டுமே புலனாய்வு அலுவலராக இருக்க முடியும் என்றால் சரியல்ல. UAPA சட்டத்தின்படி மேற்படி பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டால் உடனடியாக காவல் துணை கண்காணிப்பாளர் வழக்கினை தனது புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றால் சரிதான். 08.02.2020ம் தேதியன்று நான் வழக்கு விசாரணையை நான் என் பொறுப்பிற்கு எடுத்துக் கொண்டேன். வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர் நான் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் இடைப்பட்ட காலத்தில் வழக்கு அடுத்தகட்ட நடவடிக்கைக்கு எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். தனிப்பட்ட நபர்களிடம் புகார் வாக்குமூலம் பெறப்படாமல் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரே உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிகளை விசாரணை செய்வதற்கு அவரை அழைப்பாணை கொடுத்து வரவழைத்து விசாரிக்க வேண்டுமென்றால் சரியல்ல. நான் பதிவு செய்த வாக்குமூலம் அனைத்தும் நேரில் விசாரித்து பதிவு செய்ததாகும். நான் சாட்சிகளை விசாரித்ததாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயாரித்த ஆவணங்களில் கூடுதலாக நான் விசாரித்ததுபோல் வார்த்தைகளை சேர்த்து கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் கண்ணன், மணிகண்டன் பெயர் முதல் தகவலறிக்கையிலோ, ஆய்வாளர் முதலில் தயாரித்த பிரிவு 161 ன்படியான வாக்குமூலங்களிலோ துலங்காது

என்றால் சரிதான். நாங்கள் அடிப்படையேதுமற்ற புகாரை பதிவு செய்து நடக்காத ஒரு செயலுக்கு வலு சேர்க்கும் விதமாக ஆவணங்களையும் , சாட்சிகளையும் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் காவலர்கள் பயன்படுத்தும் தினசரி நாட்குறிப்பு பாக்கெட் நாட்குறிப்பு ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 13.01.2020 ம் தேதி சாட்சிகள் வழக்கமான ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்தார்களா இல்லையா என்ற ஆவணங்களை நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்று பார்வையிட்டேன் ஆனால் அவைகளை என்னுடைய ஆவணங்களில் நான் குறிப்பிடவில்லை. நான் சம்பவ இடம் சென்றதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரோ சிறையிலிருந்த நேரத்திலோ அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 6 ம் எதிரியை காவல் அடைப்பிற்கு அனுப்பும்போது விசாரித்தேன். நான் எந்த நாளில் எந்த தேதியில் சம்பவ இடம் சென்றேன் என்று ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். பரமசிவம், விநாயகம் ஆகியோர்களை நான் விசாரிக்கவில்லை. மேற்படி நபர்கள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக கூறுவது உண்மையல்ல என்றும் அதனால்தான் சாட்சிகள் எவரும் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக உரிய காலத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் காலநீட்டிப்பு செய்துதரும்படி

நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். இவ்வழக்கில் அதுபோன்ற காலநீட்டிப்பு கடிதம் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது அதில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரியாது. நான் அதுபோன்ற வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் அதுபற்றி விவரங்கள் தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 30.06.2020 அன்று திருநெல்வேலியில் மாவட்ட நீதிமன்றம் CrlMp.No.2975/2020 என்ற மனுவில் காலநீட்டிப்பு வழங்கமுடியாது என்று தள்ளுபடி செய்துள்ளார். அந்த வேண்டுகோள் 1 முதல் 5 எதிரிகளின் பிணை உத்தரவை இரத்து செய்யக்கோரும் பரிகாரமும், காலநீட்டிப்பு வழங்ககோரும் பரிகாரமும் கேட்கப்பட்டிருந்தது. காலநீட்டிப்பு கோரிய பரிகாரம் குறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. பிணையை இரத்து செய்யும் மனு மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் காலநீட்டிப்பு வழங்காத நிலையில் இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும் ஆனால் நீதிமன்ற உத்தரவை மதிக்காமலும், சட்டப்படியும் நடந்து கொள்ளாமலும் நான் பணிபுரிந்த காலம் வரை இறுதியறிக்கை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. விசாரணை என்ற பெயரில் வேண்டுமென்றே காலதாமதம் செய்யும் நோக்கத்துடன் புலனாய்வு அறிக்கையை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாமதத்ததால் தான் குற்றப்பத்திரிக்கை 4 ½ ஆண்டுகள் தாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தனிப்படை அமைத்து

ஆளினர்களை நியமித்த உத்தரவு மேல் அதிகாரிகளின் உத்தரவுப்படி பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. UAPA சட்டத்தின் படி ஒரு இடத்தை சோதனை செய்யவும் பொருட்களை கைப்பற்றவும் காவல் துறை தலைவர் அனுமதி பெற வேண்டுமென்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றிய விவரங்களை உடனடியாக துறை தலைவருக்கு தெரிவிக்க வேண்டுமென்றால் சரியல்ல. ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு சென்று சோதனை மற்றும் கைது நடவடிக்கையை மேற்கொள்ளும்போது அந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கவேண்டுமென்றும் கைது செய்யப்பட்டபின்னர் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்றால் சரியல்ல. கைது செய்யப்பட்டால் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும். அவர் களியாக்கவிளையில் கைது செய்யப்பட்டிருந்தால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கு வைத்து விசாரிக்கப்பட்டிருப்பார் என்றால் அங்குள்ள விபரம் பற்றி எனக்கு தெரியவில்லை. ஆய்வாளர் களியாக்கவிளை அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்றிருப்பார். என்னுடைய விசாரணையில் நேசமணி நகர் காவல் நிலையம் அருகில் உள்ள காவல் நிலையமா என்று எனக்கு தெரியவில்லை. கைது செய்யப்பட்டதாக கூறப்படும் பேருந்து நிலையத்திற்கு 500 மீட்டர் தொலைவிலேயே களியாக்கவிளை காவல் நிலையம் உள்ளது என்றும் ஆனால் சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள நேசமணிநகர் காவல் நிலையத்திற்கு 6 வது எதிரி கொண்டு

செல்லப்பட்டதாக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மேலும் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் இருவரும் களியாக்கவிளை சென்று சோதனை நடவடிக்கையின்போது உடனிருக்க அதிகாரவரம்பு கொண்டவர்கள் அல்ல என்றும் ஆவணங்கள் அனைத்தும் ஆய்வாளர் விருப்பத்திற்கேற்ப நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அவர் விருப்பத்திற்கேற்ப சாட்சிகளை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைத்து புலனாய்வை வேறு நபர்களிடம் ஒப்படைக்க இயலாது என்றும் துணை கண்காணிப்பாளருக்கு குறைவில்லாத நபர் விசாரிக்க வேண்டுமென்பதால் நான்தான் விசாரித்திருக்க வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல. எனவே ஆய்வாளர் 6ம் எதிரியை கைது செய்து பதிவு செய்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. 6ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் தடை செய்யப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் எதையும் அவர் பயன்படுத்தியதில்லை என்றும் அதனை 6ம் எதிரி எடுத்துக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு வீட்டை சோதனையிட நீதிமன்ற முன் அனுமதி பெறவேண்டுமென்றால் 6ம் எதிரி எடுத்துக் கொடுத்த பொருட்கள்தான் கைப்பற்றப்பட்டது சோதனை நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பொருட்களுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 6வது எதிரியின் வாக்குமூலத்தில் கூறப்படும் பெயர்கள்,

களியாக்கவிளை சதாம், காஜாமைதீன், தௌபிக், அலி ஆலிம்ஷா, சாஜித், ஷாஜகான் ஆகியோர்களை நான் விசாரிக்கவில்லை ஏனென்றால் அவர்கள் இந்த வழக்கிற்கு தொடர்புடைய நபர்கள் அல்ல என்பதால் விசாரிக்கவில்லை. 10.02.2020 ம் தேதி 6 ம் எதிரியை ஆய்வாளர் என்னிடம் ஆஜர்படுத்தினார். விசாரணை அலுவலர் என்ற முறையில் நான்தான் எதிரியையும், சான்று பொருட்களையும், ஆவணங்களையும் அனுப்பிவைத்தேன். நான்தான் அனுப்பி வைக்க வேண்டுமென்றால் சரிதான். படிவம் 91 ல் ஆய்வாளர் கையொப்பம் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் படிவம் 91 தயாரித்த பின்னரே என்னிடம் ஒப்படைத்தார். ஆய்வாளர்தான் நேரடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் என்னிடம் ஒப்படைத்து அதை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கும்படி நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்தான் நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதேபோலவே மடிக்கணினியை நீதித்துறை நடுவர் நீதிமன்றததில் ஒப்படைத்து அதிலிருந்து படி நகல் பெற்றுத்தரும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். எதிரிகளை 90 நாட்களுக்கு மேல் காவல் நீட்டிப்பு செய்ய நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். அதன்பின்னர் எந்தவொரு உத்தரவையும் நீதித்துறை நடுவர் பிறப்பிக்க இயலாது என்றும் அது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வேண்டுமென்றே அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. புலனாய்வை முடித்த பின்னர் இறுதியறிக்கையுடன்

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி அரசுக்கு அனுப்பி அரசு அனுமதியுடன் மட்டுமே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. வழக்கில் எதிரிகள் மீது குற்றம்இழைத்ததாக எந்த முகாந்திரமும் இல்லை என்பதால்தான் தேசிய சிறப்பு புலனாய்வு முகமை தகுதிவாய்ந்த வழக்கு அல்ல என்று விசாரணைக்கு ஏற்க மறுத்துவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. NiA எற்க மறுத்த உத்தரவு நகலை வழக்குடன் இணைக்கவில்லை என்றால் பின்னர் வந்த புலனாய்வு அதிகாரி கவனத்தில் கொள்ளாமல் இருந்திருக்கலாம். வழக்கிலுள்ள அனைத்து ஆவணங்களும் சான்று பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிரிகள் இந்திய இறையாண்மைக்கு எதிரானாவர்கள் அல்ல என்றும் சதிசெயல்களில் ஈடுபட்டவர்கள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சிகள் அனைவரும் காவல் துறையில் பணிபுரிபவர்கள் என்றால் சரிதான். குழுவை ஒருங்கிணைத்ததாக காஜாமைதீன் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. காஜாமைதீன் என்பவர் சிறையில் உள்ளார் அவர் எந்த வழக்கில் சிறைப்படுத்தப்பட்டுள்ளார் என்று இந்த வழக்கு ஆவணங்களில் துலங்காது. முதல் தகவலறிக்கையில் இந்திய இறையாண்மைக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடப்போவதாக அவர்கள் பேசினார்கள் என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரியின் தாயார் வீட்டின் எந்த அறையில் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது என்று ஆய்வாளர் என்னுடைய

விசாரணையிலும் அவர் தயாரித்த ஆவணங்களிலும் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். 13.01.2020 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது பொருட்கள் 09.02.2020 அன்று கைப்பற்றப்பட்டது. அனைத்து பொருட்களும் மின்சாதன பொருட்கள் கிடைக்கும் கடைகளில் கிடைக்கும் பொருட்கள் என்றால் சரிதான். வாக்குமூலத்தில் எதிரிகள் கூறியதாக சொல்லப்படும் தகவல்கள் தவிர இந்திய இறையாண்மைக்கு எதிராக வேறு ஆவணங்கள் எனது விசாரணையில் இருக்கும்வரை கிடைகப்பெறவில்லை என்றால் சரிதான். என்னுடைய மேல் விசாரணையில் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. வாக்குமூலங்களை தட்டச்சு செய்த காவலர் சுப்புலட்சுமி என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 15.07.2020 அன்றுதான் நீதிமன்றத்தால் பொருட்கள் பெறப்பட்டதாக மேற்குறிப்பு காணப்படுகிறது என்றால் சரிதான். 5 மாத காலதாமதம் ஏன் ஏற்பட்டது என்று குறிப்பாக எனது விசாரணை ஆவணங்களில் விளக்கப்படவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் கொரோனா பெருந்தொற்று பொதுமுடக்கம் காரணமாக நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்கவும், பெறுவதும் சாட்சிகளை விசாரிப்பதும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அமைப்பிற்கான சிறப்பு குறியீடு எதுவும் கைப்பற்றப்படவில்லை. உரிமையாளர் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அவரை 7 மாதங்கள் கழித்துதான் விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கு குறிப்பிடத்தக்க

காரணம் ஏதுமில்லை. 08.02.2020 ம் தேதியான வழக்கு நாட்குறிப்பு என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். 08.02.2020 ம் தேதியன்றே 6 ம் எதிரியின் பெயர் முகவரி, போன்ற விவரங்கள் உள்ளது என்றால் சரிதான். 09.02.2020 அன்றுதான் 6 ம் எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். ராமன்புதுர் கிராம நிர்வாக அலுவலர், மற்றும் கிராம உதவியாளரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காவலர் சாட்சி செந்தில்குமார் சாட்சி பட்டியலில் இணைக்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. படிவம் 91 09.02.2020 ம் தேதி தயாரிக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அது நிலையத்தில் வைத்து தயாரிக்கப்படுவது என்றால் சரிதான். பொருட்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் படிவம் 91 தயாரிக்கப்படுகிறது. 10.02.2020 ம் தேதி எதிரி என்னால் கைது செய்யப்பட்டார். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் தனிப்படை அமைத்து உத்தரவு பிறப்பித்ததாக கூறுவதும் அதனடிப்படையில் ஆய்வாளர் தலைமையில் தனிப்படை கன்னியாகுமரி மாவட்டம் சென்று தேடுதல் பணியில் ஈடுபட்டதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் பிறப்பித்ததாக கூறப்படும் உத்தரவு பின்னிட்டு வழக்கிற்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் 6 ம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 6 ம் எதிரி எந்த தடை செய்யப்பட்ட பொருட்களையும் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி மாநகர காவல் அலுவலகம், கோயம்புத்தூர் காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.சுரேஷ்குமார் (Technical Sub Insepctor), City Police Office, Coimbatore என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.08.04 17:41:20 +0530